# இறைவன் மாம்சத்தில் தோன்றினாரா?

எழுதியவர்
**இஸ்கந்தர் ஜதீத்**



Did God appear in the Flesh?
by Iskander Jadeed

Tamil Edition

.

For Private Circulation only

No part of this Publication may be translated, or transmitted on any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system without permission in writing from the author and publisher.

## அதிகாரம் 1

**கேள்வி :**

**இயேசு மாம்சத்தில் அவதரித்த ததவன் என்று சொல்லும் போது, நீங்கள் என்ன பொருள்பட சொல்லுகிறீர்கள்? இதுதான் நீங்கள் விசுவாசிப்பது என்றால், இயேசு ஏன் மனித அவதாரம் எடுக்க வேண்டும்?**

**-F.K.**

*திருப்போலி, லெபனான்*

1. மனிதனின் ஆத்துமா, தான் விரும்பும் ஒரு முழுமை நிலையை தானாகவே அடைய இயலாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், இம்முழு நிலையை அடைய பாவ பிரமாணம் ஒரு பெரியத் தடையாக உள்ளது.

இந்த உண்மையை பரிசுத்த பவுலடியார் இவ்வாறு விளக்குகிறார், அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்யென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை.

ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற



ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. (ரோமர்.7:18-23)

2. பவுலடியாரின் வார்த்தைகள் மனிதனின் ஆத்துமாவில், கிருபைக்கும் அழிவிற்கும் இடையே ஏற்படுகிற போராட்டத்தை தெளிவாக விவரிக்கின்றது. மேலும், மனிதன் விரும்புகின்ற, மகிழ்கின்ற தேவ பிரமாணத்திற்கும், மனிதனை வசீகரிக்கின்ற, கட்டாயப்படுத்துகின்ற, கட்டுப்படுத்துகின்ற பாவப்பிரமாணத்துக்கும் இடையே ஏற்படுகிற போராட்டத்தையும் விளக்குகின்றது. ரோமர் 7:24-ல், நிர்ப்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்ற வார்த்தைகள் பவுலடியார் தன்னைத் தானே பாவ பிரமாணத்திலிருந்தும், மரணத்தினின்றும் விடுவித்துக் கொள்ள பரத்தை நோக்கி மன்றாடுகின்றதைக் காட்டுகிறது. விடுதலை நாயகனின் சாயலை மனு உருவெடுத்த வார்த்தையானவரில் கண்ட பவுலடியார், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் (ரோமர் 7:25) என்று மகிழ்கின்றார்.

இந்த இரகசியம், தொடர்ந்து வேதனை மேல் வேதனையை அனுபவித்த தேவ மனிதனான யோபுவிற்கு முன்பே வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தனக்கும், தன்

தேவனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தர் தேவை என்பதை துயர சம்பவங்களினாலும், பாடுகளினாலும் சூழப்பட்டிருந்த யோபு கீழ்க்கண்டவாறு கூறுகிறார். எங்கள் இருவர் மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்கள் இல்லையே. அவர் தமது மிலாற்றை என்னை விட்டு அகற்றுவாராக; அவருடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணாதிருப்பதாக. அப்பொழுது நான் அவருக்குப் பயப்படாமல் பேசுவேன்; இப்பொழுதோ அப்படிச் செய்ய இடமில்லை (யோபு 9:33-35) எனவே, தேவனுடைய இரண்டாவது அடிப்படைத் தன்மை அல்லது தேவத்துவத்தில் அடங்கியுள்ள நபர் (அரபு மொழியில் UQNUM) மாம்சத்தில் தோன்றினார். அவர் உண்டாக்கிய மீட்பு மனிதன் தன் தேவனோடு ஒப்புரவாகவும் ஆதிநிலையை அடைய வேண்டிய அவசியத் தேவையை நிறைவேற்றுகிறது.

3. மனிதனுக்குள்ளேயுள்ள அசுத்த எண்ணங்களுக்கு அவன் பரிதாபமாக அடிமையாகிறான் என்பது ஒவ்வொரு மனிதனும் தனது தனிப்பட்ட அனுபவத்தில் கண்ட உண்மையாகும். எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி (ரோமர்3:23) என்று பவுலடியார் கூறுகிறார். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது என்று 1 யோவான் 1:8 கூறுகிறது. இதே உண்மையைத் தான் இஸ்லாம் மதமும் குர்-ஆனில் ஏற்றுக்கொள்கிறது. மனிதர்கள் செய்யும் குற்றங்களைப் பற்றி, அவர்களை அல்லா உடனுக்குடன் பிடிப்பதாக இருந்தால் பூமியில் உயிர்ப் பிராணிகளில் ஒன்றையுமே அவன் விட்டு வைக்க மாட்டான்.



(ஸரா 16:61).

ஆகவே, ஒரு சாதாரண மனிதன் தனக்குள்ளேயுள்ள ஆன்மீக சக்தியின் உச்சக் கட்டத்தையடைய அவனுக்கும் மேலான அவனை விட உயர்ந்த ஒரு சக்தியுடன் இணைந்தும், அதினால் நடத்தப்படும் போதும் தான் முடிகிறது என்ற உண்மை சரித்திரபூர்வமாகவும், நமது அறிவாலும் தெளிவாக விளங்குகிறது.

4. ஆதாம் பாவம் செய்வதற்கும் முன்னிருந்த உன்னத நிலையை மனிதன் அடைய முடியாத தோல்விக்கும், மனிதனுடைய குறைவுகளை விவரிக்கும் முயற்கிசிக்கும் நாம் நமது ஆராய்ச்சிகளை கட்டுப்படுத்தியுள்ளோம். இதோடு நின்று விடுவது நாம் நமது தோல்வியை ஏற்றுக் கொள்வதாகும். இந்த சோர்வு நமது உன்னத தேவனின் நோக்கத்தை நிறைவேற்றும் என்று நாம் கற்பனை செய்ய இயலாது. மாறாக தேவன் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றும் உள்ளது. தனது சாயலில் உருவாக்கிய மனிதனை, நன்மைகளையே செய்யும் நல்ல தேவன், எக்காரணத்தைக் கொண்டும் அழிந்து போகும் சிக்கலான நிலைக்கு தள்ள மாட்டார். மனிதன் தேவன் தன்னைப் படைத்த நோக்கத்தை நிறைவேற்ற தவறியதால், அவனை முழுமையாக்க வேறொரு நபரை முன்கூட்டியே தீர்மானம் செய்திருப்பது நிச்சயம். அந்த நபர் யார்? இந்த நபர் பூரண பரிசுத்தரா? அல்லது அவரே தேவனா?

5. சில மதக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட நமது கொள்கைகளால், நாம் நமது திடமான நிலையை விட்டு விலகாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், இத்தகைய ஆராயப்படாத நம்பிக்கைகள், நம்மை உண்மை

நிலையிலிருந்து எளிதாக விலக்கச் செய்யும். உலகின் எல்லா மதங்களும், மனிதன் கடவுளுடைய உறவை அல்லது அவருடைய சமூகத்தை என்றும் விரும்புகிறான் என்ற உண்மையை மறுப்பதில்லை. இதனால்தான், மனிதன் கடவுளிடம் தினமும் பிரார்த்தனை செய்கிறான். மேலும், கடவுளின் உதவியையும், வழிகாட்டுதலையும் எப்பொழுதும் தேடுகிறான். உண்மையிலேயே கடவுள் தன்னைத் தேடும் மனிதர்களுக்கு, உதவியும், அமைதி வழியிலே வழிகாட்டியும் வருகிறார். இதனால்தான், மனிதர்கள் சில சின்னங்கள் அல்லது அடையாளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி, ஆன்மாவிலிருந்து கடவுளோடு ஒரு நித்திய இணைப்பைப் பெற முயல்கின்றனர் என்பதை உணரலாம். இச்சின்னங்கள் மனித அறிவுக்குச் சில சமயங்களில் எட்டாத இரகசியமாகவும், மர்மமாகவும் உள்ளது. தேவ மனிதனான அகஸ்டீன் என்பவர் தனது பிரார்த்தனையில் இப்படிச் சொன்னார், எல்லாம் வல்ல தேவனே, எம்மை உமக்காக படைத்தீர், எனவே எங்கள் ஆத்மா உம்மில் இளைப்பாறும் வரை ஒய்வு கொள்வதில்லை.

எனவே, மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே மனிதத் தன்மைக்கும் மேற்பட்ட உருவாக்கப்பட்ட ஒரு மத்தியஸ்தர் உண்டு என்று எண்ண (நினைக்க) வாய்ப்பில்லை. இதற்கு எதிர்மாறான ஆதாரங்களே நிறைய உண்டு. தேவனுடைய படைப்புகள், அவர் விரும்பின முழுமையை அடையவும், மனிதன் இரட்சிக்கப்படவும் ஒரே ஒரு வழி, தேவனுடைய கிரியையாகத்தான் இருக்க முடியும் என்பது உறுதி. எனவே, தேவனுக்கே எல்லா துதியும் கனமும் உண்டாவதாக.

இந்த நிலையைப் பெறத்தான், தெய்வத்துவம்



முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட மூன்று அடிப்படை நிலைகள் அல்லது நபர்களை உள்ளடக்கியதாய் உள்ளறது. (அரபு மொழியில் AQANIM).எனவே, மனிதவதாரம் இன்மூன்றில் ஒன்றைத் தெரிந்தெடுப்பதின் மூலமே நிறைவேற்ற முடியும். வேறொன்றாக இருக்க வழியில்லை.

பெரும் பாவத்தில் விழுந்து, உதவியும், நம்பிக்கையும் அற்ற மனித குலத்துக்கு, இரட்சிப்படைய, தேவகுமாரனைத் தவிர வேறு வழியில்லாமல் இருப்பது தேவனுடைய சித்தம் ஆகும். இதனால்தான் மனிதன் இரட்சிப்படைய தேவக்குமாரன் ஒருவர் மட்டும் சர்வ வல்லமையுள்ளவாயிருக்கிறார். மாம்சத்தில் மனிதக்குமாரனாக அவதரிக்க, தேவன் பார்வையில் முதல் தேவை அது திருத்துவத்தின் ஒன்றாக இருக்க வேண்டும என்பதே. (அரபு மொழியில் UQNUM).

பாவத்தில் விழுந்த மனித இனத்தை இரட்சிக்க மனிதவதாரம் கொண்ட தேவக்குமாரனைத் தவிர தேவனுக்கு வேற வழியில்லையா? என்கிற கேள்விக்கு விடையளிக்க நான் முயற்சிக்கவில்லை. ஆனால், தேவ வார்த்தையின் உண்மை வழியாக கண்டதென்னவென்றால், மனிதவதாரம் தான் மிகச்சிறந்த சரியான வழி என்று திட்டவட்டமாக என்னால் கூற முடியும். உண்மையிலேயே இது தேவையை சந்திக்க ஒரு உன்னதமான, போதுமான ஞான வழியாகும். மனித குலத்தை இரட்சிக்க தேவன் மனிதவதாரம் எடுத்தது, உண்மையிலேயே தேவ நோக்கம் நிறைவேற ஒரு முழுமையான காரியமாகும். விழுந்து போன நிலைமையிலிருக்கும் மனுக்குலத்திற்கு இது அத்தியாவசியத் தேவை.

6. நான் ஒரு உண்மையை சொல்லக்

கடமைப்பட்டிருக்கிறேன். மாட்சிமைப் பொருந்திய தேவன், தான் படைத்த தனது படைப்புகள் ஒரு உன்னத நிலையை அடைய, அதனோடு தானும் இணைந்து செயல்பட விரும்பினார். ஆதியில் படைத்தது போல ஆகக்கடவது என்று கட்டளையிட்டு, அதை நிறைவேற்ற விரும்பாமல், தமது படைப்பில் ஓர் உயர்ந்த நிலையில் தானம் வாசம் பண்ணுவதின் மூலமாகவே வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஓர் பூரண மனிதனாக தாமே அவதரித்து நிறைவேற்ற விரும்பினார்.

7.பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ள மீட்பின் போதனைகளை நாம் ஆராய்ந்துப் பார்ப்போமானால், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் வரும் மத்தியஸ்தருக்குக் கீழ்கண்ட சிறப்பியல்புகள் இருக்க வேண்டிய அவசியத்தைக் காண்கிறோம்.

**a.அவர் மனிதனாக இருக்க வேண்டும்**

இறைவனின் இரண்டாவது அடிப்படை நிலை அல்லது தெய்வத்துவத்துள் அடங்கிய நபர் (அரபு மொழியில் UQNUM) இறைத்துாதராக அவதரிக்காமல் மனுவுரு எடுத்ததின் நோக்கத்தை அப்போஸ்தலர் விளக்கும்போது, மனிதராகிய நம்மை மீட்கும்படியாகவே அப்படியானார் என்று கூறுகிறார். எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாக மனுக்குலம் மீறிய நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டு பிறப்பதும், துன்பங்களை அனுபவித்து நம்முடைய பாவங்களுக்கான மீட்கும் பொருளாய் தம்மையே பலியாக்கி மரிப்பதும், நமது பலவீனங்களை அறிந்து கொள்ளும்படி, மனித ரூபம் எடுத்து மனித வாழ்வில் ஒரு பங்கெடுப்பதும் அவசியமானதொன்றாக இருந்தது. (எபிரேயர் 2:14)



**b.அவர் பாவமில்லாதவராக இருக்க வேண்டும்**

நியாயப்பிரமாணத்தின்படி பலிபீடத்தில் படைக்கப்படும் எந்த பலியும் குறையுள்ளதாக இருக்கக் கூடாது. அதாவது, பாவத்திலிருந்து மனிதனை மீட்க வந்த இரட்சகர் ஒரு பாவியாக இருப்பது முடியாத காரியமாகும். அப்படி பாவியாக இருந்தால் அவருக்கு இறைவனுடைன் எந்தவித நேரடித் தொடர்பும் இருக்க முடியாதது மட்டுமல்ல, நீதியும் பரிசுத்தமும் இல்லாத ஒருவர், பரிசுத்தத்திற்கும், நித்திய வாழ்வுக்கும் மூலக்காரணராக இருக்கவும் முடியாது. ஆகவே, நம்முடைய தலைமை ஆசாரியர் பரிசுத்தராக, மாசில்லாதவராக, குற்றமற்றவராக, பாவத்திற்கு விலகினவராக இருக்க வேண்டியது அவசியம். (எபிரேயர் 7:26)

**c.அவர் இறைவனாக இருக்க வேண்டும்**

சாதாரண படைப்பை விட பெரியவரான ஒருவரின் பரிசுத்த இரத்தத்தை தவிர வேறொன்றாலும் பாவத்தை அகற்ற முடியாது. ஆகவே, கிறிஸ்து, இறைவனாக தம்மையே ஒரே முறை பலியாக்கினதினாலே,பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை அந்தப் பலியினாலே என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார் (எபிரெயர் 7:27 மற்றும் 10:14)

இப்படியாக சாத்தானின் சக்தியை முறியடிக்கவும், சாத்தானிடம் சிறைப்பட்டு உள்ளவர்களை விடுவிக்கவும் வல்லமையுள்ளவர் இறைத்தன்மை உள்ளவராகத்தான் இருக்க முடியும். ஆகவே, சர்வ வல்லமையும், சர்வத்தையும் அறிந்தவராகவும், சர்வ ஞானியாகவும், எல்லோருக்கும் நியாயாதிபதியாகவும், இறை சபையின் தலைமை ஆசாரியராகவும் இருப்பவர் மட்டுமேயன்றி, வேறொருவராலும் இத்தகைய உன்னத மீட்பை அளிக்க முடியாது.

மீட்கப்பட்டவர்களின் ஆன்மீக வாழ்க்கைக் ஊற்றாக இருப்பவர், இறைவனின் முழுத் தன்மைகளையும் தம்முடைய மாம்சத்தில் பெற்றிருக்க வேண்டும்.

8) நமது பரிசுத்த வேதாகமத்தில் நிர்ணயித்தவாறே, மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே தமத்தியஸ்தம் செய்யத் தகுதியான, எல்லா நற்பண்புகளும், தான் செய்ய வந்த காரியத்தை முடிக்கும்படிக்கு கிறிஸ்துவுக்குள் ஒருங்கே அமைந்திருந்தது.

கிறிஸ்துவுக்குள் காணப்டும் இந்த குணங்களை ஆராயும்போது, அவர் மனிதகுல மீட்புக்காக செய்து முடித்த, செய்து கொண்டிருக்கும் செயல்கள் மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மத்தியஸ்தரின் பணி, நிச்சயமாகவே ஒரு இறை செயல் என்பதை தெளிவாக்குகிறது.

கிறிஸ்து இயேசு தனது மத்தியஸ்த பணியினால் அனுபவித்த பாடுகளும், பணிகளும் ஒரு இறைத் தன்மையுடைவரால் மட்டுமே அனுபவிக்க முடியும். சிலுவையில் அறையப்பட்டவர் மகிமையின் கர்த்தர் தன்னைத்தானே மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தவர். இறைவனின் இரண்டாவது அடிப்டை நிலை அல்லது தேவத்துவத்தின் இரண்டாவது நபராவார் (அரபு மொழியில் UQNUM)

சரித்திரச் சான்றுகள்

9) இறைவனுடன் கொண்ட ஒரு நிரந்தர உறவு மற்றும் தனது சக பிறவிகளுடன் ஈடு இணையில்லா அன்பைக் காட்டுவது என்ற இந்த இரண்டு சிறந்த பண்புகளையும் மனிதகுல நன்மைக்காகவே தன் வாழ்வில் வாழ்ந்து காட்டிய ஒருவர் இவ்வுலகில் வாழ்ந்தார் என சரித்திர சான்றுகள்



காட்டுகின்றன. அவர் இவ்வுலகில் வாழ்ந்தபோது, நற்செய்தியைப் பிரசங்கிததும், நன்மைகள் செய்தும், பிசாசினால் வாதிக்ப்பட்டவர்களுக்கு விடுதலை கொடுத்தும் வந்தார். அவர் ஒரு தந்தை, தன் பிள்ளைகள் மேல் கொண்ட கரிசனத்தைப் போல, இறைவனும் ஒவ்வொரு மனிதன் மேலும் கரிசனைக் கொண்டவராயிருக்கிறார் என்றும், மனந்திரும்புகின்ற ஒவ்வொரு பாவியையும், ஒரு தந்தை தன்னிடம் வருகின்ற தன் துன்மார்க்கமான பிள்ளையை மார்புடன் அணைத்துக் கொள்வது போல், இறைவனும் ஏற்றுக் கொள்கிறார் என்ற புதிய வெளிப்பாடுகளைச் சொல்லி இறைவனை வெளிப்படுத்தினார்.

10. மற்றும் 11) இவர் அன்பை பற்றிப் போதித்து, இரக்கத்தினால் கிரியை செய்தது மன்றி, தம்முடைய வார்த்தைகளை புரிந்து கொள்ளும்படியாகவும், தம்முடைய வல்லமையின் மாதிரியை பின்பற்றும்படியாகவும், எப்பொழுதும் அவருடனேயே இருக்கும்படியாக ஒரு சீஷர் குழுவை ஏற்படுத்தினார். இந்த சீஷர்கள் நாளுள்கு நாள் அவரைப் பற்றிய அறிவில் வளர்ந்ததுமன்றி, அவரின் எண்ணங்களை இன்னும் அழமாக உணர்ந்து அவரின் உவமைகளின் உள்ளர்த்தங்களைப் புரிந்து கொண்டனர். அவர்கள் அவரின் ஆவியின் ஐசுவரியத்தினால்(மகத்துவத்தினால்) கவரப்பட்டவர்களாக, அவரின் நம்பிக்கையில் வளர்ந்து, இறைவனோடு அவருக்கிருந்த ஐக்கியத்திலும் பங்கெடுத்தனர். இருந்த போதிலும், இந்த தீய உலகம் இவர் நிமித்தம் பயம் கொண்டு நடுங்கியது. உண்மைக்கு தங்கள் கண்களை மூடிக் கொண்டவர்களாய், தங்கள் சொந்த நீதியின் மேல் சார்ந்து கொண்ட மனிதர்கள் இவருக்கு விரோதமாய் கலகம் செய்து,

இவர் இறைவனின் சட்டங்களை உடைத்தவர் என்றும் இறைவனுக்கு விரோதமான துஷணங்களை சொன்னவர் என்றும் குற்றம் சுமத்தி தண்டனைக்கு உட்படுத்தினர். அவர்களால் அவர் மேல் மரண தண்டனையும் சுமத்த முடிந்தது. ஆமுனால் இவைகளையெல்லாம் அவர் எப்படி சந்தித்தார்? ஒரே ஒரு வார்த்தை சொன்னாலே பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட இறைதூதர் சேனைகள் சூழ்ந்து அழித்து விடக்கூடிய தம்முடைய வல்லமையை அறிந்திருந்தும், திரும்பப் பேசாமல் அமைதியாக இருந்தார். தம்முடைய விடுதலைக்கான எந்த வயையும் அவர் டேவில்லை. இறைவனுடைய அன்பை விளங்கச் செய்யும்படி தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். இறைவனுடைய பர்வையில் காணப்படுகின்ற பாவத்தின் கொடுமையையும், பெருக்கமும் மக்ள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காக, குறையற்றிருந்த மனித குலத்தின் மல் பேன்ற பூரணமாக தம்முடைய சரீரத்தில் பாவத்தின் வேதனையை அனுமதித்துக் கொண்டார்.

இவர் மனித இனத்தின் பாவத்தை, தீமையை மேற்கொள்ள, அதனுடைய எல்லா முரட்டுத்தனமாக தாக்குதல்களையும், கொடுமைகளையும் மரண பரியந்தம் சகித்தார். இவ்வாறு மனித இனத்தின் அனைத்து பாடுகளிலும் பங்கேற்று, தனது வெற்றிக்கு வழிகாட்டி முடிவில் வெற்றியும் பெற்றார்.

12. மூன்றாம் நாள் இவர் உயிர்த்தெழுந்தார். முன்பதாக அவர் இவ்வாறு சொன்னார், ''நான் என் ஜீவனையும் மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து



எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு'' (யோவான் 10:17,18). அவர் சொன்னபடியே செய்தும் முடித்தார். அவர் வேலையும் முடிந்தது. இறை வெளிப்பாடும் நிறைவேறிற்று. முழு அன்பும் வெளிப்பட்டது. பாவத்தின் முழுமையான பெலமும் இந்த யுத்தத்தில் தோற்கடிக்ப்பட்டது. தீமையை நன்மை வென்றது.

13). இதன் வினைவு என்ன? அவரது சீடர்கள் இதன் பலனை அனுபவித்ததைக் காணலாம். அவருடன் சேர்ந்து வாழ்ந்தால், அவரைப் பற்றிய முழுமையான அறிவு பெருகிறது. இந்த அறிவு உயிர்த்தெழுந்த அவரைக் கண்டபொது, முழுமையாக மலர்ந்தது. அவர்களுக்கு அவர் ஒரு மனிதனாகவோ, அல்லது மனிதனை விட உயர்ந்த ஒரு ஜவனாகவோ தெரியவில்லை. அவர்களுக்கு அவர் ஒரு இறைத்தன்மை உள்ளவராகவே தோன்றிறார். அவர் தம்மைப் பற்றிக் கூறியவைகள் இறைவனுக்கு மட்டுமே உரியவைகளாதலால், அவைகள் வேறு எவருக்கும் தூஷணமாகவே இருக்கும்.

ஆனால், அவர் தன்னைப் பற்றி சொன்ன அனைத்துமே சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. கறிப்பாக, அவர் தொழுகைக்கு ஒரியவர் என்பது மெய்யகவே மனிதனாக வாழ்ந்த இறைவன் என்பதும் அதே நேரத்தில் அண்ட சராசரங்களையும் தம்முடைய பரலோக சிங்காசனத்திலிருந்து ஆளுகிறவர் என்பதும் நிரூபணமாயுள்ளது.

14). இது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கி

வாழ்ந்த சீடர்களுக்கு மட்டும் கிடைத்த அனுபவமல்ல அவருடைய சார்பாக அவரால் அன்புபப்பட்ட அவரின் சீஷர்கள், அவருடைய ஆவியின் வல்லமையால் இந்த நற்செய்தியைப் பரப்பின இடமெங்கும் வேகமாகப் பரவியது.

நசரேயனாகிய இயேசு கிறிஸ்து மனிதனாக மட்டுமல்ல, இறைவனாகவும் இருந்தார் என்ற உண்மை, இயேசு மாம்சத்திலிருந்ததைக் கண்டவர்கள் மரித்தவுடன் மறைந்துவிடவில்லை. ஏனென்றால், இந்த உண்மை ஒரு தவறான மதக் கொள்கையிலிருந்து வந்ததல்ல. இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார் என்று அறிந்து, அவருடனும், அவரைத் தேடுகிற அனைவரோம் ஒரு தனி உறவை ஏற்படுத்திக் கொண்ட அனைத்துக் கிறிஸ்தவர்களும், எல்லாக் காலத்திலும் அனுபவித்த ஒரு அணுபவம் இது ஆகும். இந்த அணுபவம் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறவுக்கு ஒரு தடங்கலாயிராமல், இறைவனோடு உள்ள ஒரு நடைமுறை ஐக்கியமாக இருக்கிறது.

15). இந்த தெய்வீக நபராகிய இயேசு கிறிஸ்து (அரபு மொழியில் UQNUM). ஒரு உயிரற்ற, குறைபாடுள்ளவராயில்லாமல், உலகத்தையே நிரப்புகிறவராக ஈரக்கிறார். இங்கும், அங்கும் எங்கும் நிறைந்து இருக்கிறார். அவர் மனிதனை தொட்டு, "என்னை பின்பற்றி வா " என்று அழைக்கிறார். ஆனால் மனிதன் பயத்தினால் நிறையும் போது, "இறைவனே! உமது ஊழியம் எனக்கு கடினமாயும், சுமையாயும், என்னால் தாங்க முடியாததாகவும் உள்ளது. உம்முடைய அடிச்சுவடுகளில் என்னால் பின்தொடர முடியவில்லை, நான் ஒரு பாவி. எனவே, என்னை விட்டு விடும்"



என்று பதிலளிக்கிறான். இயேசு, அதற்கு பதிலாக, " உன் வாழ்க்கையை என்னை நம்பி என்னிடம் அர்ப்பணித்து விடு. என்னில் விசுவாசித்து, என்னைப் பின்பற்றினால், எனது கிருபை உனக்கு என்றும் போதுமானது" மனிதன் அவருக்கு செவிசாய்த்து, அவருடைய சீடனாக மாறலாம், " வருத்தப்பட்டு, பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் . . . பூமியின் கடையாந்திரம் மட்டும் உள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று அழைத்துக் கொண்டேயிருக்கிறார். அநேகர் அவரது தெய்வீகத் தன்மையின் கிருபையினால் இழுக்கப்பட்டும், அவர் கூப்பிடுதலைக் கேட்டும் அவரிடம் வருகின்றனர். ஆப்பிரிக்க கண்டத்தில் அவர் நாமம் பிரபலமாகி வருகிறது. அவரண்டை வருவதினால் கூட்டம் கூட்மான ஆப்பிரிக்க மக்கள், மந்திரவாதிகள், சூனியக்காரர்கள் ஆகியோர் பிடியிலிருந்தும், அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்தும் விடுதலையைக் கண்டிருக்கிறார்கள். உலகத்தின் ஒவ்வொரு தேசத்திலும் எல்லா ஜாதி, இன மக்கள் இயேசுவினால் தொடப்பட்டும், மனமாற்றப்பட்டும் வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் வாழ்க்கை முற்றிலம் மாபற்றப்பட்டு வருகிறது. முன்பு பெருமையினாலும், மாம்ச இச்சையிலும், பாவத்திலும் இருந்தவர்கள், இப்பொழுது அவருடைய சுவிசேஷத்திற்கு ஏற் நீதியும், பரிசுத்தமும் உள்ளவர்களாய் வாழ்கிறார்கள். இந்தப் புதிய மாற்றத்துக்குக் காரணம் என்னவென்று அவர்களிடம் கேட்டால், அவர்கள் சொல்லும் பதில் " கர்த்தராகிய இயேசுவை அறிந்து கொள்ளும் பாக்கியத்தினாலேயே இந்த மாற்றங்கள்"

என்பதுதான்.

ஆகவே நசரேயனாகிய இயேசுவின் வாழ்க்கை இறைவனின் படைப்பிற்கு ஒரு மகுடமாகவும், அந்த படைப்பின் செயலையே மாட்சிமை பொருந்திய உன்னத நிலைக்கு உயர்த்தி, அதை பூரணப்படுத்துவதாக உள்ளது என்று நாம் முழு நிச்சயத்துடன் சொல்ல முடியும். இயேசுவில் உலகப் படைப்பு ஒரு முழு நிறைவைப் பெற்றுள்ளது. இயேசுவில் ஜீவனும், ஆவியும் இறை நோக்கத்தை எட்டியுள்ளது. மேலும், இயேசுவை அன்பினால் ஏற்றுக் கொண்ட அனைவரும் இறைவின்ல நிலைத்தும், முழுமைப் பெற்றும் வருகின்றனர். வேறு வார்த்தைகளில், இயேசுவை விசுவாசிக்கும் ஆத்துமா, வாழ்க்கையின் நோக்கத்தின் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. அதாவது உலகைப் படைத்த இறைவனோடு ஒன்றாகக் கலந்து அவருடைய படைப்பையே அவரிடம் உயர்த்துகிறது.

16). இதுதான் சரித்திரத்தின் தீர்ப்பும், முடிவுமாகும். இருந்த போதிலும் இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில் " பூரணமான நபர்" என்பது, அண்டசாராசத்தின் இறைத்தன்மையாயும், அந்த இறைத்தன்மையின் பிரதிபலிப்பாகவும் இறைவனுக்கும் அவரது படைப்பிற்கும் இடையே உள்ள ஒரு இணைப்பாகவும் மாத்திரம் இல்லாமல், " தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9) என்ற வார்த்தையின்படி அவர் பரிபூரண இறைவனாகவும் இருந்தார். இயேசு தன் மனித வாழ்க்கையின் வழியாக இறைத்தன்மையை பிரகாசமாக பிரதிபலிப்பராக மட்டும் அல்ல " இவர் இறைவனுடைய மகிமயின் பிரகாசமும், இறைவனுடைய



தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குறிவராயுமிருக்கிறார்"

இயேசுதான் ஆதியிலே இருந்த வார்த்தை, அவர் ஆதியில் தேவனோடிருந்தார். அந்த வார்த்தை தேவனாயிருந்தது . . . சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை(யோவான்1:1-3). எனவே, துதி, கனம், மகிமை, ஞானம், வல்லமை, அரசுரிமை, அதிகாரம் அனைத்தும் பெற அவர் தகுதியுள்ளவராயிருக்கிறார்.

**" தேவ பக்திக்குரிய இரகசியமானது, யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் . . . "**

(1தீமோத்தேயு 3:16)

## அதிகாரம் 2

**கேள்வி :**

**"இறைவன் இந்த உலகத்தையோ அல்லது இவ்வுலகில் வாழ்பவர்களையோ சார்ந்து இருக்கவில்லை என்பதும், இறைவன் மகா உன்னதராயிருந்தும் தம்முடைய படைப்புகளிடம் அவர் கொள்கிற எந்த உறவும் அவரை காலத்தாலும், உடத்தாலும் கட்டுப் படுத்துகிறது என்பதையும் நன்கு அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இறைவனின் முழுமையான செயல்பாட்டைத் தடுத்து செயலள்ள நிமலையிலேயே வைக்கும் என்பதால் அப்படிப்பட்ட கருத்துகள் தேவதூஷணமேயன்றி வேறில்லை. ஆகவே இறைவன் மனிதன் ஆனார் என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை, இறைவனின் ஒரு பகுதி மட்டும் கிறிஸ்துவின் உடலுக்குள் உடமாற்றப் பட்டுள்ளது என்பதாக தானே அர்த்தம்?"**

**-A.S.**

*பெய்ரூட், லெபனான்.*

17. இந்தக் கேள்வியைக் கேட்ட எனது அன்பரே, நீங்கள் ஒரு நிமிடம் நின்று யோசித்தால், ஒரு உண்மை விளங்கும். நீங்கள் நம்புகின்ற இஸ்லாம் காலத்துக்கும், இடத்துக்கும் உட்பட்ட ஒரு உறவின் பரிணாமமே இறைவனுக்கு, அவரின் படைப்புகளோடு இருப்பதாக சொல்கிறது.

இறைவன் ஒரு தூதரை மனிதர்க்கு அனுப்பினார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். அப்படியென்றால், இறைவன் தம்முடைய படைப்பினங்களோடு ஒரு உறவை எற்படுத்திக் கொண்டார். குர்-ஆன் சொல்வதென்னவென்றால், "நிச்சயமாக நாம் உங்களிடம் நம்முடைய ஒரு தூதரை அனுப்பி



வைத்தோம் அவர் உங்களுக்குச் சட்சியாக வருவார். இவ்வாறே பிர் அவ்னிடமும் முன்னர் ஒரு துதுரை நாம் அனுப்பி வைத்தோம். எனினும், பிர் அவ்ன் அத்தூதருக்கு மாறு செய்தான். ஆகவே, நாம் அவனைப் பலமாகப் பிடித்துக் கொண்டோம்" ய(ஸூரா 73:15,16). மேலும், மனிதன் கடவுளுடன் ஓர் உறவு ஏற்படுத்திக் கொள்வதை இறைவன் விரும்புவதால், மனிதன் இதைச் செய்ய வேண்டும் என்றும் குர்-ஆன் கூறுகிறது. "அல்லாஹ்வின் மீதே நீர் நம்பிக்கை வையும். நிச்சயமாக அல்லாஹ் தன்னை நம்புவோரை நேசிக்கின்றான்" (ஸூரா3:159)

இந்தக் கூற்று ஒரு அடையாளத்துக்காக சொல்லப்பட்டது என்று நீங்கள் வாதிடலாம். இது உண்மைக்கு முன் நிற்க முடியாத விளக்க உமரைகளை படிப்பது போன்றதாகும். இதே போல் மனிதர்களுக்கு சில குறிப்பிட்ட செல்களைச் செய்ய இறைவன் ஆணையிட்ட அநேக எடுத்துக்காட்டுகளை நாம் காண முடியும். இதாரணமாக குர்-ஆன் சொல்கிறது, "நாம் நோவாவை மனிதர்களிடையே அனுப்பினோம். அவர் சொன்னார், "என் ஜனங்களே, அல்லாவை சேவியுங்கள். அவரைத் தவிர உங்களைக் காப்பாற்ற வேறு தெய்வம் இல்லை. ஐயோ! தெய்வ தண்டனை அனுபவிக்க வேண்டிய அந்த பயங்கர நாளைக் கண்டு நான் அஞ்சுகிறன்"

அந்த ஜனத்தின் தலைவர்கள் நோவாவிடம், "அதற்கு அவருடைய மக்களின் தலைவர்கள், நீர் பகிரங்கமான வழிகேட்டில் இருப்பதை மெய்யாகவே நாங்கள் காண்கிறோம்" என்று கூறினார்கள். அதற்கு அவர் என்னுடைய மக்களே! நான் எத்தகைய வழிகேட்டிலும் இல்லை; எனினும் நிச்சயமாக

நான் அகிலங்கள் அனைத்துயம் படைத்துப் போஷிக்கும் இறைவன் புறத்திருந்தே வந்த ஒரு தூதன் என்று கூறினார். நான் என் இறைவனின் செய்திகளையே உங்களுக்கு எடுத்துரைத்து, உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறேன். நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்விடமிருந்து நான் அறிகிறேன்" (ஸுரா 7:59-62). இப்படிப்பட்ட வசனங்கள் குறிப்பிட்ட சம்பவங்களை பற்றி பேசுவதால் இவற்றை அடையாளங்களாக எடுத்துக் கொள்ள முடியாது.

18). முஸ்லீம்களுக்கு கட்டளையிட்டப்பட்டுள்ள பிரார்த்தனை சடங்குகள் பற்றி, சம்பிரதாய தீர்க்கதரிசனம் கூறுவதைப் பற்றி, நீங்கள் என் சொல்ல முடியும்? இபின் இஷாக் இது குறித்து விளக்கும் போது, "வானத்துக்கு ஏறிச்சென்ற இரவின் நாட்குறிப்புகளில்" இறைத் தூதர் (முஹம்மது) சொன்னதாக இன் முஷீத் சொன்னதை மேற்கோள்காட்டி, "கடைசியில் காபிரியேல் என்னை இறைவன் சமூகத்திற்கு முன்பாக கொண்டு வந்தார். இறைவன் எனக்கு நாளொன்றுக்கு ஐம்பது பிரார்த்தனை சடங்குகளை நியமித்தார். நான் திரும்பி வரும் வழியில் மிகச்சிறந்த நண்பனான இம்ரான் மகன் மோசேயை சந்தித்தேன். இறைவன் நாறொன்றுக்கு எத்தனை பிரார்த்தனைகள் செய்ய வேண்டுமென்று சொன்னார் என்று கேட்டதற்கு, நான் "ஐம்பது" என்றேன். அதற்கு அவர் "நாளொன்றுக்கு ஐம்பது பிராத்தனைகள் அதிகம். அவற்றைச் சொல்ல உன் ஜனங்களுக்கு பலம் இல்லை. எனவே திரும்பிச் சென்று இதை குறைக்கச் சொல்லி உன் இறைவனிடம் மன்றாடு என்றார். நானும் கடவுளிடம் சென்று அவ்வாறே மன்றாடினேன். என்



மன்றாட்டைக் கேட்டு, இறைவன் பத்து பிராத்தனைகளைக் குறைத்தார். திரும்பி வருகையில் மோசேயை சந்தித்தேன். அவர் மறுபடியும் முன் சொன்னதையே சொன்னார். மீண்டும் இறைவனிடம் சென்று மன்றாடியதற்கு, அவர் இன்னும் பத்துறைத்தார். வரும் வழியில் மோசேயைக் காண, அவர் அதே காரியத்தை மறுபடியும் சொல்ல, நான் இறைவனிடம் சென்று மீண்ம் வேண்ட, அவர் இன்னும் பத்தை குறைத்தார். நான் ஒவ்வொரு முறை அவரண்டை(மோசே) திரும்பி வரும்போது அவர், திரும்பிச் சென்று உன் இறைவனை வேண்டு என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். கடைசியாக ஐந்து பிரார்த்தனையை மட்டும் இறைவன் கொடுத்தார். இம்முறை "நான் ஒவ்வொரு இரவுக்கும், பகலுக்கும், இறைவனிடம் மீண்டும் மீண்டும் சென்று மன்றாடியதைக் கண்டு நான் வெட்கமடைகிறேன். இனிமேல் நான் திரும்பிச் செல்ல மாட்டேன். விசுவாசத்தாலும், செயலாலும், ஐந்து பிராத்தனையைச் செய்பவர்களுக்கு இறைவன் ஐம்பது பிராத்தனைகளின் பலனை அளிப்பார்." (The Prophert's Chronicles by IBN Hisham 3:276)

19. இந்த பாரம்பரிய தீர்க்கதரிசன மேற்கோள் உங்கள் சிந்தனைக்காக கொடுத்திருக்கிறேன். நீங்களே சிந்தித்து, இறைவனுக்கும், அவர் படைத்த உயிரினங்களுக்கும், மேலும் அவர் படைத்த உயிரினங்களுக்கும், அவருக்கும் உறவு உண்டா இல்லையா என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். அன்புடன் நான் உங்கள் முன் ஒரு கருத்தை வைக்கிறேன். தேவத்துவத்தின் கருத்திலிருந்து இறைவனுக்கு மனிதப் பண்பு அளித்தலை முற்றிலும் நீக்கி விடுதல் (அரபு மொழியில் TANZIH) என்ற கொள்கையை தொடர்ந்து பற்றிக்

கொண்டிருப்பீர்களென்றால் நீங்கள் விசுவாசிக்கும் இறைவனைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது மற்றும் அவரிடத்திலிருந்து நீங்கள் முற்றிலும் பிரிக்கப்பட்டவர்களாவீர்கள். இந்நிலை, நீங்கள் தீர்க்கதரிசனத்தையும், திருகுர்-ஆனையும் முழு மனதாக மறுப்பதற்கு சமமாகும். ஒரு இறைத்தூதர், இறைவனுக்கும் அவர் படைத்தவர்களுக்கும் இடையே ஒரு உறவை எற்படுத்தவே ஊக்குவிக்கப்பட்டும், அழைக்கப்பட்டும் இருக்கிறார்.

20. ஒரு பாரம்பரிய இறைவாக்கு இவ்வாறு கூறுகிறது. இறைவனின் நாமம் புகழப்படுவதாக, மேன்மைப்படுவதாக. அவர் ஒவ்வொரு இரவும் பூமிக்கு அருகான வானத்துக்கு இறங்கி வந்து, பூமிக்கு அருகான வானத்துக்கு இறங்கி வந்து, இரவு நேரத்தின் கடைசி மூன்றுஒரு பாங்கு நேரம், அங்கு தங்கி இருற்ந்து, இவ்வாறு அழைக்கிறார், என்னை நோக்கி பிரார்த்தனை செய்பவர்கள் யாரேனும் உண்டா? அவர்களுக்கு நான் கொடுப்பேன். பாவ மன்னிப்பு கேட்பவர்கள் யாரேனும் உண்டா?அவர்களை நான் மன்னிப்பேன் (Bukhari 4:68)

தேவத்துவத்தின் கருத்திலிருந்து இறைவனுக்கு மனிதப் பண்பு அளித்தலை முற்றிலும் நீக்கும் (அரபு மொழியில் TANZIH) கொள்கை, இறைவனை (அவர் நாமம் புகழப்படுவதாக) அவர் படைப்பிலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டு, தனித்த நிலையில் இருப்பராகவே கூறுகிறது என நான் நம்புகிறேன். இது இறைவனைக் குறித்த காரியங்களை சீர்குலைக்கிறது கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலையில், மனிதனால் மனம் திரும்பவோ அல்லது, புதுப்பித்தலை அனுபவிக்கவோ இயலாது.



கடவுளிடம் உறவு இல்லாத பொழுது, பாவத்திலிருநது மனிதன் தன்னைத்தானே நீதியின் நிலைக்கு உயர்த்த எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் பலன் தராது என்கிற உண்மை அனுபவத்தால் கண்டதொன்றாகும்.

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத்தேயு 6:27) என்று இயேசு கிறிஸ்து தமது மலைப் பிரசங்கத்தில் சொன்னார். தேவத்துவத்தின் கருத்திலிருந்து இறைவனுக்கு மனிதப் பண்பு அளித்தலை முற்றிலும் நீக்கும் (அரபு மொழியில் TANZIH) கொள்கை, அநேகம் பேருக்கு, இறைவன் மனிதவதாரம் எடுத்த கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு தடையாக உள்ளது. எனவே, இவர்கள் இரட்சிப்பின் நன்மையை அனுபவிக்க இயலாத நிலையில் உள்ளனர். இறைவனின் மனிதவதார நிலையை நிராகரிக்க இவர்கள் சொல்லும் அநேக எதிர்வாதங்களில் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

21). இறைவனின் மனிதவதாரம், அவரது தெய்வத்தன்மையை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கும், இடத்திற்கும் உட்பட்ட ஒரு நிலைக்கு கொண்டு செல்கிறது என்று வாதிடுகிறார்கள். இது முழுமையற்ற மனதை உடையவர்கள் உபயோகிக்கும் அளவு கோலாகும். உண்மையிலேயே இவர்கள் இறைவனுக்கு சக்தியற்ற நிலையையும், இறைத்தன்மையில் மாறுதல் இல்லாமலேயே மனிதவதாரம் எடுக்க முடியாத நிலையையும், சுமத்துகிறார்கள். ஆனால், இறைவன் மனிதவதாரம் எடுத்த தமது இயற்கை நிலையை மாற்ற வேண்டியதில்லை என்பதுதான் உண்மையாகும். திரித்துவத்தின் இரண்டாவது நபர் (அரபு மொழியில்: UQNUM)

மனிதவதாரத்தில் வந்தபொழுது, அவர் தனது தெய்வத்தன்மையை இழக்கவில்லை. மாறாக அவர் தேவனாகவே இருந்து மரித்தோரை உயிர் கொடுத்தெழுப்பினார். குருடர்களுக்கு பார்வை அளித்தார், குஷ்டரோகிகளை சுகமாக்கினார்.

பாவிகளை மன்னித்தார், புயல்களையும் கடலையும் அமைத்திப்படுத்தினார், அவர் அசாதாரணமான முறையில் வெளிப்பட்டார் என்றும், அவர் தாமே மனித சரீரங்களையும், மனித தன்மைகளையும் படைத்தவராயிருந்தபடியினாலே அந்த மனிதர்களோடு இணைந்திருப்பதில் எந்த சிரமமும் அவருக்கு இல்லாதிருந்தது என்று சுவிசேஷங்கள் கூறுகின்றன. இதற்கு எதிரான எந்த எண்ணமும், இயற்கையையும், மனிதனையும் படைத்தவர் இறைவனல்ல, வேறொரு ஜீவன் என்பதை ஏற்றுக்கொள்வதாகும்.

22). எந்த ஒரு ஞானமுள்ள, புத்திசுவாதீனமுள்ள மனிதனும், தனது சுற்றுச்சூழலுக்கும், சந்தர்ப்ப நிலைக்கும் தன்னைத்தானே இணங்க வைத்துக் கொள்ள திறமையுள்ளவன் என்பதை நாம் அனுபவத்தால் அறிகிறோம். இப்படியிருக்க, சர்வ வல்லமையும், சர்வ ஞானமும் உள்ள இறைவன் தன்னியல்பு நிலையில், ஒரு மாற்றமும் இன்றி மனிதவதாரம் எடுப்பது என்பது எவ்வளவு நிச்சயம்.

சூரியன் தனது கதிர்களால் பூமிக்கு வெட்பம் தந்து, பூமியிலுள்ள மற்ற காரியங்களோடு இணைந்து, பூமியில் உள்ளவைகளுக்கு உயிரும், வளர்ச்சியும் தருவதால், அதன் அமைப்புக்கு ஒரு மாறுதலும், ஏற்படுவதில்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவன் படைத்த



சூரியனுக்கே தனக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாமல், மற்ற உயிர்களுடன் இணையவும் அவற்றை பாதிக்கவும் சக்தியிருந்தால், எல்லாம் வல்ல இறைவனுக்கு அத்தகைய சக்தியில்லை என்று கூறுவது சரியா?

இறைவன் முதல் மனிதனை சுட்ட பாத்திரத்தைப் போல் சப்தமிடும் களிமண்ணால் அவன் முதல் மனிதனைச் சிருஷ்டித்தான் (ஸீரா 55:14) எனவே, இறைவன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து களிமண்ணை எடுத்து மனிதனைப் படைத்தார் என்பது தெளிவாகிறது. இறைவன் சர்வ வல்லவரானபடியினாலே ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்தது அவரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று நீங்கள் சொன்னால், அவ்வாறே அவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மனிதவதாரம் எடுத்ததும் அவரைக் கட்டுப்படுத்தாது என்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால் அவர் சர்வ வல்லமையுள்ளவர். எனவேதான் இயேசு கிறிஸ்து மனுஷரால் கூடாதவைகள், தேவனால் கூடும் (லூக்கா 18:27) என்று சொன்னார்.

23).முஹம்மது நபிகள் சொன்னதாக, பாரம்பரியம் சொல்வதென்னவென்றால், உயிர்தெழும் நாளில் விசுவாசிகள் என்னிடம் வந்து இறைவனிடம் சென்று தங்களுக்காகப் பரிந்து பேச வேண்டும் என்று கேட்கும்பொழுது, நான் அவரை எனக்கு கொடுக்கப்பட்ட அவரது வீட்டில் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கேட்பேன். அப்படி அவரைக் காணும்பொழுது, அவர் பாதத்தில் விழுந்து அவரை வணங்குவேன் (BUKHARI 4:18)

இங்கு ஒரு வினா எழுகின்றது இறைவன் மாம்சத்தில் தோன்றினார் என்று ஒரு கிறிஸ்தவன் சொன்னாலே, அது ஒரு

தேவ தூஷணம் என்று குற்றம் சொல்லப்படுகிறது. ஆனால், இன்னொருவர், இறைவனை ஒரு வீட்டின் எல்லைக்குள் கட்டுப்படுத்தி சொல்லும்பொழுது, அவர் மீது குற்றம் சொல்லாதது ஏன்?

அருள் யாவும் நிச்சயமாக அல்லாக்ஷ்வின் கையில்தான் இருக்கிறது. அவன் விரும்பியவர்களுக்கு அதனை அளிக்கின்றான். அல்லா மகத்தான அருளுடையவன் (ஸீரா 57:29)

நிச்சயமாக எவர்கள் உம்மிடம் வாக்குறுதி செய்கிறார்களோ, அவர்கள் கைமீது அல்லாவுடைய கைதான் இருக்கிறது (ஸீா 48:10)

ஆட்சி யார் கையில் இருக்கின்றதோ, அவன் மிக்க பாக்கியமுடையவன். அவன் யாவற்றின் மீதும் ஆற்றலுடையோன் (ஸீரா 67:1)

நாம் அறிவிப்பது போல நம்முடைய கண்முன்பாகவே ஒரு மரக்கலத்தை நீர் செய்யும் (ஸீரா 11:37) உமதிறைவனின் தீர்ப்பை எதிர்பார்த்துப் பொறுத்திரும். நிச்சயமாக நீர் நம் கண் முன்பாகவே இருக்கின்றீர் (ஸீரா52:48) உமது தாய்க்கு வஹீ மூலமாக நாம் அறிவித்த சமயம்; பேழையில் வைத்து நதியில் எறிந்து விடு. அந்நதி அதனைக் கரையில் சேர்த்து விடும். எனக்கும் அவருக்கும் விரோதியாக உள்ளவனே அவனை எடுத்துக கொள்வான். நீர் என் பார்வையில் போஷிக்கப்படுவதற்காக உம்மீது என் அன்பைச் சொரிந்தோம் (ஸீரா 20:39)

24). மும்மது சொன்னதாக அபு ரைரா என்பவர் சொல்லும் போது: இறைவன் எல்லா படைப்புகளையும்



படைத்தார். பெண் இனத்தின் உறவுகள் அருகில் நின்றபொழுது, அவர்கள் இரக்கம் உள்ளவரின் இடையைப் பற்றிக் கொண்டனர், என்று சொன்னதாக பாரம்பரியம் மேற்கோள் காட்டுகிறது (Bukhari 3:114)

மேலே கூறிய அனைத்து எடுத்துக்காட்டுகளும், இறைவனுக்கு ஒரு முகம், ஒரு கை, ஒரு கண் மற்றும் ஒரு இடை போன்ற ஒரு மனித உடலின் உறுப்புகள் இருப்பதாக சொல்லுகிறது.

இறைவனுடைய மனிதவதாரம் என்பது தேவ தூஷணம் என்றால் மேற்கூறியவற்றை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

25). ஒரு பரிசுத்தமான இறைவன் எப்படி ஒரு பெண்ணின் கருப்பையில் இரத்தத்திலும், கருத்தரித்தல் மற்றும் பிரசவத்தில் ஏற்படும் அசுத்தத்திலும் இருக்க முடியும்? அவர் எவ்வாறு ஒரு மனித வடிவில் தாகமெடுத்தும், தண்ணீர் குடித்தும், பசியெடுத்தும், உணவுண்டும்,மலம் கழித்தும் சிறுநீர் கழித்தும் வாழ முடியும்?

இவ்வாறு சொல்லுபவர்கள் தேவ தூதன் சொன்ன, மரியாளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. (மத்தேயு 1:20) என்ற உண்மையை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாவர். இறைவன் ஒரு பெண்ணின் இரத்தத்துடன் சேர்ந்து வருவதற்கு மேல் அதிக பரிசுத்தராயிருந்தால், ஆதாம், விலா எலும்பை எடுத்து ஏவாளை தேவன் உண்டாக்கினார் என்பதை எப்படி நம்புவார்கள் மற்றும், நபிநாயகம் எனது மாதவிலக்கு நேரங்களில் எனது மார்பின் மீது சாய்ந்து, திருக்குர்-ஆனை

ஓதினார் (Bukhari1:44) என்று ஆயிஷா சொன்னதாக கூறும்பாரம்பரிய இறைவாக்கை எவ்வாறு இவர்கள் விளக்க முடியும்?

இரத்தம் அசுத்தமாகவும், திருக்குர்–ஆன் இறைவனின் முழுத் தன்மையிலிருந்து தோன்றினதும், அவரை விட்டு பிரிக்கமுடியாத நித்திய வார்த்தையாகவும் இருந்தால், எப்படி நபிநாயகம் அவர்கள் ஆயிஷாவின் மாதவிலக்கு நேரங்களில் அவர் மார்பின் மீது சாய்ந்து, அதைப் படிப்பது நியாயம் என்று கூறும் போது இப்படியிருக்க புனித மரியாளின் கருவில் இறைவார்தை மாம்சமாகி மனிதவதாரம் எடுப்பது எப்படி அநீதியாகும்?

உமதிறைவன் மலக்குகளை நோக்கி, நிச்சயமாக நான், மனிதனை சப்தம் கொடுக்கக்கூடிய பிசுபிசுப்பான களிமண்ணால் படைக்கப் போகிறேன் (ஸூரா 15:28) என்று சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது. இறைவன் மண்ணை கரும்மண் என்று ஜலாலன் விளக்கமளிக்கிறார். பரிசுத்தமான இறைவன் கரும் மண்ணை எடுத்து அசுத்தப்படுத்தவில்லை என்றால், மண்ணிலிருந்து படைத்த மனிதனுக்கு மற்ற படைப்புகளக்கு மேல் முடிசூட்டியபின், அவனுக்குள் வந்து வாழ்வதானால் அவனை இழிவுபடுத்தாமல் உயர்த்தியிருப்பது எவ்வளவு அதிக பொருத்தமாயிருக்கும். பவுலடியார் வாயிலாக தேவன் சொன்ன கீழ்க்கண்ட வசனத்திற்காக, அவருக்கு எல்லா துதியும் உண்டாவதாக. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1கொரிந்தியர் 3:16) பரிசுத்தமான இறைவன் ஒரு விசுவாசியின்



உள்ளே தம்முடைய ஆவியின் மூலமாக தங்குவதில் ஒரு தீங்கும் இல்லையென்றால், ஒரு பாவமும் அறியாத, மனுஷ வித்தில்லாமல் தோன்றிய இயேசுவின் சரீரத்திற்குள் அவர் தங்குவது எவ்வளவு பொருத்தமாயிருக்கும்?

மூஸா தவணையைப் பூர்த்தி செய்து தன்னுடைய குடும்பத்தினருடன் சென்றபொழுது துார் பக்கத்தில் ஒரு நெருப்பைக் கண்டு, தன் குடும்பத்தினரை நோக்கி, நீங்கள் தாமதித்திருங்கள்; நிச்சயமாக நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன்; நான் பாதையை பற்றியதொரு தகவலை உங்களுக்குப் கொண்டு வரக்கூடும்; அல்லது நீங்கள் குளிர்காய்வதற்கேனும் ஓர் எரிகொள்ளியைக் கொண்டு வருகிறேன் என்று கூறினார்.

அவர் அதனிடம் வந்தபொழுது, மிக்க பாக்கியம் பெற்ற அச்சமவெளியிலுள்ள ஓடையின் வலது பக்கத்திலுள்ள ஒரு மரத்திலிருந்து, மூஸாவே! நிச்சயமாக உலகங்களைக் சிருஷ்டித்துப் போஷிக்கும் அல்லா நான் தான் என்ற சப்தத்கைக் கேட்டார் (ஸூரா 28:29,30)

இதே சம்பவம் ஸூரா 20, வசனங்கள் 9-13ல் மறுபடியும் சொல்லப்பட்டுள்ளது. நபியே! மூஸாவின் சரித்திரம் உம்மிடம் வந்திருக்கிறதா? அவர் நெருப்பைக் கண்ட சமயத்தில் தன் குடுப்பத்தாரை நோக்கி, நீங்கள் தாமதித்திருங்கள். மெய்யாகவே நான் நெருப்பைக் காண்கிறேன் என்றார்.

அவர் அதனிடம் வரவே, மூஸாவே! எனச் சத்தமிட்டடைழத்து, நிச்சயமாகவே நான்தான் உமதிறைவன். உம்முடைய காலணிகள் இரண்டையும் கழற்றி விடும். நிச்சயமாக நீர் துவா பள்ளத்தாக்காகிய பரிசுத்த ஸ்தலத்தில்

இருக்கிறீர்.

நான் உம்மைத் தெரிந்து கொண்டேன் . ஆதலால் வஹீ மூலம் அறிவிக்கப்படுபவைகளை நீர் செவியுறும் (ஸுரா 20:9-13)

இந்த சம்பவம் இமாம் பக்ருதீன் அராசி என்பவரால் கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது. மோசே அவருக்கு சமாதானம் உண்டாவதாக: சுஅயிப் இடம் விடைபெற்று, தன் தாயிடம் திரும்பினான். திரும்பும் வழியில் குளிர்கால வெள்ளிக்கிழமை நாள் இரவன்று, அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது அவன் வழிதப்பினான். மோசே, அவர் மேல் சமாதானம் உண்டாகட்டும், சக்கிமுக்கிக் கல்லால் நெருப்பு மூட்டுவதற்கு முயன்றான். ஆனால் முடியவில்லை. அப்பொழுது தூரத்தில், அவனது பாதையின் இடது பக்கத்தில் ஒரு அக்கினி ஜுவாலையைக் கண்டான். அசாதி என்பவர், கூறும் போது மோசே, அந்த ஜுவாலை ஆட்டு மேய்ப்பர்களால் எற்றப்பட்டது என நினைத்தான் என்று சொல்லுகிறார். இந்தக் கதையைச் சொல்லும் மற்றவர்கள் மோசே அக்கினி ஜீவாலையை மரத்தில் கண்டதாகச் சொல்லுகிறார்கள்.

அவன் அதைப் பார்த்தபொழுது, தனது குடும்பத்தாரிடம் இங்கேயே தங்கியிருங்கள். நான் துாரத்தில் நெருப்பு ஜுவாலையைப் பார்த்தேன். நான் அங்கு சென்று கொஞ்சம் கொள்ளிக் கட்டைகளை அல்லது சக்கிமுக்கிக் கல்லை கொண்டு வருகிறேன் என்று சொன்னான். இபின் அப்பாஸ் சொல்லுகிறார், அவன் அங்குச் சென்றபொழுது, ஒரு பசமையான மரம் அடித்தண்டு முதல் உச்சிவரை பற்றி எரிவதைப் போல் தோன்றியது. பசுமை மரம் வெள்ளை நிறத்தில்



எரிவது போலிருப்பதைப் பார்த்து, அவன் பிரமித்து நின்றான். நெருப்பினால் பசுமை நிறத்தின் நிறம் மாறவில்லை. தேவ துாதர்களின் துதிப்பாடல்களையும், பிரகாசமான ஒளியையும் மோசே தன் கண்களின் மீது தன் கைகளை வைத்துக் கொண்டான். அப்பொழுது ஒரு சத்தம் அவனைப் பெயர்ச் சொல்லி மோசே, இதோ நானே உன் இறைவன் என்று சொன்னது. அவன் பிரதியுத்திரமாக, பயபக்தியோடே நான் உங்கள் குரலை கேட்க முடிகிறது, ஆனால் உங்களைப் பார்க்க முடியவில்லை. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்று கேட்டான். இறைவன் பதிலாக இதோ, நான் உன்னுடன் இருக்கிறேன். உனக்கு முன்பாகவும், உன்பின்னும், உன்னைச் சுற்றிலும், உன்னருகிலும் இருக்கிறேன் நீ பரிசுத்த பள்ளத்தாக்கில் இருக்கிறாய் எனவே, உன் பாதரட்சையை கழற்றிப் போடு என்று சொன்னார் (Attafsir Al Kabir, Volume22: page14,15).

இந்தக் கதை பரிசுத்த வேதாகமத்தில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அங்கே கர்த்தருடைய துாதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்கு (மோசேக்கு) தரிசனமானார் அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான். முட்செடி அக்கினியால் ஜீவாலையிலே நின்று அவனுக்கு (மோசேக்கு) தரிசனமானார் அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான். முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது. அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி

என்றார் (யாத்திராகமம்3:2-5).

எனதருமை நண்பரே! இறைவன் மனுக்குலத்துக்கு ஒரு செய்தியை எடுத்துச் சொல்லும் படியாக மோசேயை அழைக்கவும், அனுப்பவும் ஒரு முட்செடியை தெரிந்தெடுத்து அதன் மேல் தங்கி, அக்கினியின் உருவில் தோன்றுவாரென்றால், தம்முடைய அன்பை வெளிப்படுத்தும்படியாக இறைவன் இயேசு கிறிஸ்துவில் தோன்றினாரென்று கிறிஸ்தவர்கள் நம்புவதை நீ தேவதூஷணம் என்று குறை சொல்லுவது நியாயமில்லை அல்லவா? இறைவன் தோன்றின அந்த முட்புதர் கிறிஸ்துவை விட அதிக முக்கியமானதா? 27). நான் ஒன்று சொல்கிறேன். மாம்சத்திலிருந்த இயேசு உண்டும், குடித்தும், ஜீரணித்தும் வந்ததால், அவரிடமிருந்த தேவத்துவத்தின் முழுமைக்கு எந்த வித குறையும் ஏற்படவில்லை. இதைப் பற்றி பரிசுத்த வேதாகமம் கீழ்கண்டவாறு கூறுகிறது, ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து, நிச்சயித்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும். (ரோமர் 14:14)

28). அன்பு சிநேகிதனே! தேவன் தன்னை வெளிப்படுத்தவும், தனது நோக்கத்தை அறிவிக்கவும் மனிதவதாரத்தில் தோன்ற தெர்ந்ததெடுத்த முடிவை பரிசுத்த வேதத்தை நன்றாக ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். இந்த வெளிப்பாடும், மனிதவதாரத்தில் தோன்ற தேர்ந்ததெடுத்த முடிவை பரிசுத்த வேதத்தை நன்றாக ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். இந்த



வெளிப்பாடும், மனிதவதாரமும் மேகத்திலோ, அல்லது நெருப்பிலோ அல்லது உடன்படிக்கை தூதன் உடலிலோ அல்லது இறைவன் கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்து தோன்றிய கிறிஸ்துவின் சரீரத்திலோ எப்படித் தோன்றினாலும் அது பொருட்டல்ல.

எபிரேயருக்கு எழுதின நிருபம் 1:1-2-ல் இறைவன் மனிதரோடு கொண்ட தொடர்பைப் பற்றி முக்கியமான கருத்தை இவ்வாறு காண்கிறோம், பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார், இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் இறைவன். மனிதர்களுக்கு தோன்றியதையும் மனித இனத்தோடு பேச எடுத்துக் கொண்ட முறைகளையும் பற்றிய வேத வாக்கிய உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆதியாகமம் 18:1-5 வரை சொல்லுவதென்னவென்றால், பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடார வாசலிலே உட்கார்ந்திருந்து, தன் கண்களை ஏறெடுத்துப பார்க்கும்போது, இதோ மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள், அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து, ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குப் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொண்டு

வரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்து கொண்டிருங்கள். நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டு வருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம் வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள், நீ சொன்னபடி செய் என்றார்கள்.

இங்கு இறைவன் ஆபிரகாமுக்கு உட்கார்ந்து, புசித்து குடிக்கும் மனிதனாக தோன்றினார்.

ஆதியாகமம் 32:20-22ல் இறைவன் யாக்கோபுக்கு மனித உருவத்தில் தோன்றி அவனிடம் விடியுமளவும் போராடி, மனித உருவத்தில் தோன்றி அவனிடம் விடியுமளவும் போராடி, நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன், நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்றான். நீ தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொண்டாய் என்று சொல்லி தேவன் அவனை ஆசீர்வதித்தார். நான் தேவனை முகமுஜகமாய்க் கண்டேன், உயிர்பிழைத்தேன் என்று சொல்லி அந்த இடத்துக்கு பெனியேல் என்று பெயரிட்டான்.

யாத்திராகமம் 24:9-11 சொல்வதென்னவென்றால், பின்பு மோசேயும், ஆரோனும்,நாதாபும், அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேரும் ஏறிப்போய் இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின் கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள் மேல் தம்முடைய கையை நீட்டவில்லை. இறைவன் இங்கு கை, கால்கள் உள்ள



மனிதனாக தோன்றினார். ஆனால், அவர் தம்முடைய கைகளை இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் நீட்டவில்லை. ஏனென்றால் அவர்கள் பாவிகளாய் இருந்தபடியால், இறைவனுடைய தன்மையும் மனித தன்மையுமுள்ள ஒரு மத்தியஸ்தர் அவர்களுக்கு தேவையாயிருந்தது.

## அதிகாரம் 3

**கேள்வி:**

நீங்கள் சொல்வது போல் இறைவனுக்கு ஒரு மகன் இருப்பதாக ஏற்றுக் கொண்டு, அந்த மகன் மனித வடிவமெடுத்து, உலகுக்கு வந்து நம்மைப் போல் சோதிக்கப்பட்டு, கொடூர மனிதர்களால் கொல்லப்படுவதைத் தவிர, இரக்கமுள்ள இறைவனுக்கு மனித இனத்தை இரட்சிக்க வேறு வழியில்லையா?

-S.A.

*டமாஸ்கஸ்,சீரியா*

29). இறைவன் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்கினார் என்று (ஆதியாகமம் 1:26) பரிசுத்த வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. மனிதன் குற்றமற்றவனாக இருக்க வேண்டும் என்று மகிமையுள்ள இறைவன் விருப்பம் கொண்டார். ஆனால், மனிதன் தனது ஆணவத்தால், இறைக் கட்டளையை மீறி, இறைவனை விட்டகன்றான்.

இவ்வவாறு மனிதன் பாவியாக மாறி, இறைவனின் நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டவனானான். எசேக்கியேல் 18:20 சொல்லுகிறது. பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும் மேலும் பவுலடியார் சொல்கிறார், இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. போலவும் எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது. (ரோமர்5:12)



மனிதர்கள் தங்கள் அறிவில் இறைவனை வைக்க மறுத்தபடியினால் தங்கள் முதல் பெற்றோரைப் போலவே கீழ்ப்படியாமையில் விழுந்து போனார்கள் என்ற இறைவார்த்தை நமக்குப் போதிக்கிறது. அது முதல் இறைவன் இவர்களில் படைத்த நீதியின் சாயலையும்,சத்தியத்தின் தூய்மையையும் இவர்கள் இழந்தனர். சாலமோன் ஞானி சொன்னது போல், இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள் (பிரசங்கி 7:29) இவர்கள் தங்களது வாயின் வார்த்தையால், சீரழிந்தும் போனார்கள். எனவேதான், பவுலடியார் சொன்னார், அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது, அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும், பயித்தியக்காரர் ஆனார்கள். (ரோமர் 1:21,22)

இறைவனின் சாயலிலே படைக்கப்ட்ட மனிதன், இறைவனுடைய அறிவை மட்டும் தன் மனதில் வைத்திருந்தால், அவன் பாவத்தையும் அழிவையும் தவிர்த்து, தூய்மையில் வாழ்ந்திருக்க முடியும்.

இறைவன் நம்மை வெறுமையிலிருந்து படைத்து, நமக்கு ஜீவன்மட்டும் கொடுக்கவில்லை. அவர் நாம்அவரோடு உறவாடி வாழ்ந்து இருக்கும் வாய்ப்பையம் தந்தார். ஆனால், மனிதன் சாத்தானின் சோதனைகளை ஏற்றுக்கொண்டு இறைவனுடைய ஜீவனிலிருந்து, தனக்குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொண்டான்.

30). தம்முடைய சாயலிலேயும், ரூபத்தின்படியேயும் படைக்கப்பட்ட மனிதன், நிரந்தரமாக அழிந்து போவது இறைவனுக்கு ஏற்புடையதா? நீதியையும் நீடிய இரக்கத்தையும் உடைய இறைவன் என்ன செய்வார்? பாவம், மனிதனிலிருந்த தேவ சாயலை துடைத்து அல்லது அழித்துவிட், அவரது அன்பும் தயவும் அனுமதிக்குமா? முழுமைத்தன்மையில் படைக்கப்பட்ட மனித இனம் அழியும் போது, அவரது மகிமையான தெய்வீகத் தன்மை களிகூர்ந்திருக்குமா? மனித இனத்தை இந்த இழிவான பாவ நிலையில் வட்டு விடுவது அவரது அசட்டைச் செயலல்லவா? இந்த அசட்டை நிலை தூய இறைவனின் மகிமை நிலைக்கு உகந்ததாகுமா? இந்நிலை இறைவனின் மகிமையிலிருந்து தூரத்தில் இருப்பதாக. நான் துன்மார்க்கனடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் (எசேக்கியேல் 33:11) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

31). இறைவன் தமது அளவுக்கடங்காத அன்பினால் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார் என்பதே உண்மையாகும். ஆனால், எவ்வாறு மனந்திரும்புதல், நியாயத்தீர்ப்பையும், அதன் பலனான தண்டனையையும் மாற்ற முடியாது. ஏனென்றால், இது இறைவனுடைய நீதியை மீறுவதாகும் மனந்திரும்புதல் என்பது மனந்திரும்புகிறவருக்கும், அவரது பாவத்துக்கும் இடையியுள்ள ஒரு நிலையாகும். ஆனால், அது முன் செய்த பாவங்களின் விளைவையோ அல்லது அதற்கான இறைவனின் நியாயத்தீர்ப்பையோ அழித்துவிட முடியாது. இந்த சங்கடமான நிலையிலுள்ளவர் இப்படி ஒரு கேள்வி கேட்கலாம். இறைவன்



செயல்படும்படி என்ன வழி வைத்திருக்கிறார்? எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் சித்தமாயிருக்கின்றார் (1தீமோத்தேயு 2:4) ஒரு விதத்தில், பாவியை, பாவமற்ற நிலைக்குக் கொண்டுவர அவனை நீதிமானாக்கவும், அதே நேரத்தில் தேவநீதியை நிலைநாட்டவும் இறைவன் விரும்புகிறார் இந்நிலை பலியிடுதல் சம்மந்தமான இறை பிரமாணங்களுக்குத் தான் பொருந்தும். ஆகவே ஆதியிலே இருந்ததான அந்த வார்த்தையானவர், இறைவனோடு வாழ்ந்து, இறைவானாகவே இருந்த அந்த வார்த்தையானவரே தம்முடைய இயற்கையான தன்மையினால் மனிதனாக வந்து அந்த மனித சரீரத்தில் மனுகுலத்துக்காக, எல்லாவற்றையும் புதுப்பிக்க தகுதியுள்ளவராகிறார். இதினால்தான், அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14)

32). உண்மையிலேயே, ஆதிமுதல் இந்த வார்த்தை மாம்சத்தில் வர தன்னைத்தானே ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் தோன்றுவதற்கு முந்திய காலமெல்லாம் மனிதவதாரம் எடுக்கத் தம்மைத்தாமே ஆயத்தம் செய்து கொண்டிருந்தார் என்ற இறைமனிதனாகிய தெர்த்துல்லியன் என்பவர் கூறுகிறார். பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தராகிய மீட்பர் என்கிற அடையாள வார்த்தை எப்பொழுதும் காதில் ஒலித்துக கொண்டிருந்ததை

வேதாகமத்தை தியானிக்கிறவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் அவரைப் பற்றி இறைவாக்கு உரைக்கும் போது ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள் (ஏசாயா 7:14) இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் (மத்தேயு 1:23) என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.

நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாய பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். (கலாத்தியர் 4:4-5) என்று இறை வார்த்தை சொல்லுகிறது.

எல்லாரும் பாவஞ்செய்து, மரண ஆக்கினைக்கு உட்பட்டார்கள் என்றும், இவர்களை மீட்க ஒரு பாவமும் அற்ற நீதிமான் ஒருவரின் மரணத்தைத் தவிர வேறு வழியில்லையென்று இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்லுகிறது. எனவே, இந்த வார்த்தை மாம்சத்தில் வெளிப்பட தாமே விரும்பி முன்வந்தது. மேலும், தன்னில் விசுவாசிங்கும் அனைவரது பாவத்தையும் ஏற்று, மரணத்தின் தீர்ப்பு தன்னில் நிறைவேறம்படியாகவும் முன்வந்தது. இந்த இரகசியத்தை, பவுலடியார் பின்வருமாறு நமக்கு விளக்குகிறார்.

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.



கிறிஸ்து இயேசுவினாலே, ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தை போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின் படி நடாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8:1-4) இதன் பொருள் என்னவென்றால் நமது கர்த்தரும் மீட்பருமானவ தாம் ஏற்றுக்கொண்ட தம்முடையே சரீரத்தையே தகனபலியாகவும் குற்றமற்ற காணிக்கையாகவும் அர்ப்பணித்து, யாருக்காக அவர் மனிதனாக வாழ்ந்தாரோ அவர்கள் சார்பாக மரணத்திற்கான தீர்ப்பை செலுத்தி முடித்தார் அவர் கற்றமடற்றவராக இருந்ததினாலும், மேன்மைப்பட்டவராக இருந்ததினாலும், அவரால் இறைவனின் நியாயத்தீர்ப்பின் தேவைகளை ஏற்க முடிந்தது.

33). இரட்சிப்பின் ரகசியத்தை புரிந்து கொள்வது, கொஞ்சம் கடினமாக இருக்கலாம். ஆனால், நீங்கள் இறைவனுடைய அளவில்லா அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றின் சுவிசேஷ போதனைகளை தியானிக்கும் போது, இந்த இரட்சிப்பு இறைவனைச் சார்ந்த மனதுருக்கத்துடன இணைந்திருப்பதை அறியலபலாம். நமக்குப் போதிக்க, ஆவியில் நிரம்பி எழுதப்பட்ட, சில புதிய ஏற்பாட்டுப் பகதிகள் கீழே தரப்பட்டுள்ளன. நம்மை இரட்சிக்க இறைவனுடைய அன்பு எவ்வளவு தூரம் சென்றது என்பதனை நீங்கள் அவற்றைப்

படித்து, தெரிந்து கொள்ளலாம்.

ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு அப்படியானார் (எபிரெயர் 2:14)

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியை க் காண்பித்தார் (ரோமர் 3:24,25)

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த நமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:8,9)

தம்முடைய சொந்தக் குமாரனென்றும் ஈராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே வட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர்8:32)



இறைவனின் மனுதவதாரத்திற்கான தீர்க்கதரிசன சான்றுகள்:

என்னைக் குறித்து விசாரித்துக கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன். என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன். நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேன் (ஏசாயா 65:1,2)

இந்த வசனம் கிறிஸ்துவின் மனிதவதாரத்தைப் பற்றியதாகும். ஏனென்றால், பவுலடியார் இதைப் பற்றி சொல்லும் போது, கீழ்க்கண்டவாறு விளக்குகிறார், என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன். என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன். இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாதவர்களும், எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான் (ரோமர்10:20,21) உண்மையிலேயே இயேசுதான் தமது கைகளை சிலுவையின் மேலே நீட்டினார்.

அவர்கள் கர்த்தருடைய மகிமையையும் நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள். தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து, நீங்கள் பயப்படாதிருங்கள், திடன் கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று

சொல்லுங்கள். அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம். (ஏசாயா 35:2-5)

இந்த தீர்க்கதரிசன வார்த்தை இறைவன் இங்கு வாசமாயிருக்கிறார் என்பதை மட்டுமல்ல, அவரது வருகையையும் அவரது வல்ல செயல்களையும், சுவிசேஷங்களில் கீழ்கண்டவாறு சொல்லியிருப்பதை பிரகடனம் செய்கிறது. அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, நீங்கள் இயேசுவினிடத்திற்குப் போய், வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.... இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக, நீங்கள் போய், கண்டவைகளையும், கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள்,குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள், மரித்தோர் எபந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறடையாதிருக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான் என்றார். (லூக்கா 7:18-23)

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவித்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும், உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்ப எழுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை



வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும், அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும், இடுக்கமான காலங்களில் இப்படியாகும் (தானியேல் 9:24,25)

இந்த தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்துவைப் பற்றிய குறிப்பை மட்டுமல்ல, அபிஷேகம் பண்ணப்படுகிறவன் ஒரு சாதாரண நபர் மட்டுமல்ல, மாறாக, மிகுந்த பரிசுத்தமுள்ளவர் என்ற பிரகடனத்தை காண்கிறோம். உண்மையிலேயே, இயேசு கிறிஸ்து வந்தபொழுது, தீர்க்கதரிசனமும், வெளிப்பாடும் யூத மக்களைப் பற்றியே இருந்தது. அப்பொழுதுதான் யூத மக்களிடையே மன்னர் ஆட்சி முடிவுக்கு ந்த காலமாயிருந்தது. மகாபரிசுத்தமானவர் அபிஷேகம் பண்ணப்படும்வரை, யூதர்களுடைய ராஜாக்களும் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பார்கள் என்று யாக்கோபு தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தான். சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை; நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதியாகமம் 49:10)

பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும், பாவ நிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான், இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன். (சங்கீதம் 40:6-8)

35). இந்த வசனங்களை எபிரேயர் 10:6-10-ல் உள்ளவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த மகிமையான சங்கீதம் இயேசுவைக் குறித்தே சொல்லுவதை நாம் காணலாம். நமது மகிமையின் கர்த்தர் பழைய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள பலிகளையும், காணிக்கைகளாகிய பாதுகாவலின் பலி தகன பலிகள் மற்றும் பாவ நிவாரணபலிகளை சீர்தூக்கிப் பார்த்து பிறகு உன்னதமான இறைவன் எதிர்பார்க்கிறவைகள் இப்படிப்பட்ட பலிகளல்ல, என்று கூறினார். நாம் நமது தலைகளை தாழ்த்தி, பயபக்தியோடு பணிந்து நிற்கும் போது, இறைவனின் தூய ஆவியானவர் நம்மை நிம்மதியான கடந்த காலத்திற்குள் எடுத்துச செல்லுவார். இத்தகைய கடந்த காலங்களை நமது கட்டுக்குட்பட்ட மனித தன்மையினால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், இறைவனுடைய பரிசுத்த புத்தகத்தின் வெளிப்பாடுகளிலிருந்து, தேவத்துவத்தின் மூன்று அடிப்படை நிலைகள் அல்லது தேவத்துவத்தின் மூன்று நபர்கள் (அரபிக்:AQANIM) உண்டாகப் போகிற மனுக்குலத்தை மேலிருந்து நோக்கி அம்மனுக்குலத்துக்குள் பாவம் நுழைய அேபாகிறதையும், அதனோடு இணைந்த மரணம் நழைவதையும், இதினால் மீட்பு அவசியமென்பதை கண்டதையும் புரிந்து கொள்ள மாத்திரமல்ல, மனத்திரையில் படமாக காணமுடியும். தொடந்து குமாரனான இறைவன் தாமாகவே முன்வந்து இதோ விழுந்து போன இவ்வுலகில் பாவத்தை நிவர்த்தி செய்ய நான் போகிறேன் என்று தியாகமாக ஒப்புக் கொடுத்ததையும் காணமுடியும்.

36). மனுக்குலத்தின் நன்மையைக் கருதி மனுக்கோலம் கொண்ட கர்த்தர், இறைவனின் வாக்குத்தங்களுக்கு



உரிமையார்களாக தங்களையே சொந்தம் கொண்டாடும் ஒரே ஒரு தேசத்திற்கு மட்டும் இந்த மீட்பின் திட்டம் சொந்தமாவதை விரும்பாமல், முழு உலகத்திற்கும் இது செல்வதிலேயே விருப்பம் கொண்டார்.

இறைவனுடைய மரணம் சிவையின் வழி இல்லாமல், வேறு விதத்தில் இருந்திருக்கலாமே என சிலர் நினைக்கலாம். மனிதனை இரட்சிக்க சிலுவை மரணம் தான் மிகச்சிறந்தது என்பது இறைவனுடைய விருப்பமாக இருந்திருக்கும் என நான் நினைக்கிறேன். மனிதவதாரம் எடுத்த கர்த்தர் இவ்வகை மரணத்தை சகித்தது நல்லதே. நம்மை நியாயப்பிரமாணம் மூலமாய் அடிமைப்படுத்தி வைத்திருந்த பாவத்திலிருந்து நம்மை மீட்டுக்கொள்ள வேண்டுமானால், நமக்காக அவர் பாவமாகி, சிலுவையில் நம்முடைய பாவங்களை சுமப்பதை தவிர வேறு எப்படி முடிந்திருக்கும்?

மனுக்கோலம் கொண்ட கர்த்தருடைய மரணம் நம்மெல்லாருடைய பாவங்களுக்கும் நிவாரணமாகி, எல்லா தேசங்களுக்கும் அவரின் அழைப்பு செல்லும்படியாக, அவருடைய மரணத்தினாலே இறைவனுக்கும் நமக்கும் நடுவாக தடையாய் நின்ற பகையாகிய சுவரை தகர்க்க வேண்டுமானால் (எபேசியர் 2-14) அவர் சிலுவையில் அறையப்படாமல் எப்படி இறைவனோடு ஒப்புரவாகுதல்) சத்தியமாகும்? பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களையும், மற்ற புறஜாதியர்களையும் அவரது மகா மாட்சிமை பொருந்திய நிலையில் ஒன்று சேர்க்க, அவர் சிலுவை மரத்தில் தமது கரங்களை நிட்டி, பரிதாபமான மரணத்தை மேற்கொள்வதே சரியானதென்றும், மகிழ்ச்சியானதென்றும் நியமித்த

இறைவனுக்கு கனம், துதி, மகிமை உண்டாவதாக. ஆகவேதான் இறைவன் சொன்னார், “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்” (யோவான் 12:32)

மனுஷரால் கூடாதவைகள்

தேவனால் கூடும்.

(லூக்கா 18:27)



## சோதனை வினாக்கள்

கீழேயுள்ள 36 கேள்விகளில், 28ம் அதற்குமேலும் சரியான விடைகளை எழுதுபவர்களுக்கு இஸ்கந்தர் ஜதீத் அவர்கள் எபதிய வேறொரு புத்தகம் பரிசாக அனுப்பப்படும்.

1. ஏன் மனிதன் தன்னைத்தானே நல்லவனாகவும், பரிபூரணமானவனாகவும் அக்கிக்கொள்ள முடியாது?
2. இறைவனோடு ஒப்புரவாகிக் கொள்ள ஒரே வழி எது?
3. மனிதன் ஒரு முழுமையான பாவி என்பதனை நிரூபிக்க கூறப்பட்டுள்ள மூன்று சான்றுகள் எவை?
4. நாம் பாவிகளாகவே இருக்க வேண்டும் என்பதுதான் இறைவனுடைய சித்தமா? நமது இரட்சிப்பின் வழி எது?
5. மனிதன் உள்ளத்தின் மிக ஆழமான விருப்பம் எது?
6. இறைவனுடைய நிலைக்கு சமமாக எவ்ழியில் மனிதன் உயர்த்தப்பட முடியும்?
7. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள மத்தியஸ்தருக்கு தேவையான முக்கிய தகுதிகள் எவை?
8. தெய்வீத மத்தியஸ்தருக்கான தகுதிகள் எவ்வாறு கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவேற்றப்பட்டது?
9. ஓர் மனித சமுதாயம் சிறப்பாக இருப்பதை குறிக்கும் இரண்டு அடிப்படை காரியங்கள் என்ன?
10. இயேசு கிறிஸ்து ஏன் தமக்கு சீடர்களை தெரிந்து கொண்டார்?
11. தன்னைக் கைதுசெய்த தன் விரோதிகளிடம் இயேசு கிறிஸ்து எவ்வாறு நடந்து கொண்டார்?

12. இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலின் விளைவுகள் என்ன?

13. இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலின் விளைவுகள் என்ன?

14. இயேசு கிறிஸ்துவின் தெய்வத் தன்மையை உலகம் எவ்வாறு ஏற்றுக் கொண்டது?

15. மனிதனுடய வாழ்க்கை எவ்வாறு அடித்தளத்திலிருந்து மாற்றப்படமுடியும்.?

16. பரிசுத்த வேதாகமத்தில் கிறிஸ்து இயேசுவிற்கு தரப்பட்டுள்ள பண்புகள் எவை?

17. இஸ்லாம் மதத்தில் படைத்தவருக்கும், படைக்கப்பட்டவைகள்குக்மு இடையே ஏதேனும் உறவுகள் கூறப்பட்டுள்ளதா?

18. இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையேயுள்ள நேரடி உறவு பற்றி பாரம்பரிய தீர்க்கதரிசனம் கூறுவது என்ன?

19. தேவத்துவத்தின் கருத்திலிருந்து இறைவனுக்கு மனிதப் பண்பு அளித்தலை முற்றிலம் நீக்கி விடுதல் (அரபுமொழியில் TANZIH) என்ற கொள்கை எதை விளக்குகிறது?

20. ஒவ்வொரு இரவும் இறைவன் உலகிற்கு இறங்கி வருவதைப் பற்றி பாரம்பரிய தீர்க்கதரிசனம் என்ன சொல்லுகிறது.

21. இறைவனடைய மனிதவதாரம் எப்படி இறைவனுடைய வல்லமையின் தன்மையை மாற்றவில்லை என்று உன்னால் நிரூபிக்க முடியும்?



22. மனிதவதாரம் எடுத்து, இறைவனால் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்ற முடிந்ததா?

23. இறைவன் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் அடங்கி வைக்கப்பட்டிருக்கிறார் என்கிற பாரம்பரிய தீர்க்கதரிசனத்தின் பொருள் என்ன?

24. பரிசுத்தமான இறைவன் எவ்வாறு ஒரு பெண்ணின் வயிற்றில் இருந்தார்?

25. எரியும் முட்செடியில் இறைவன் மோசேக்கு தோன்றினார் என்பதன் பொருள் என்ன?

26. அசுத்தமானவை என்பது என்ன?

27. இறைவன் தம்முடைய வெளிப்பாடுகளில் உலகப் பொருள்களுடன் கொண்டிருந்த தொடர்பினால் கறைபடாமலிருந்தது எப்படி? இது, இறைவனால் எந்த வித இழப்பும் இல்லாமலேயே மனுக் கோலம் கொள்ள முடியும் என்பதற்கு ஓர் அடையாளமாக இருக்கிறதல்லவா?

28. மனிதர்கள் இறைவனின் சாயலை எவ்வாறு இழந்தனர்?

29. இறைவன் தமது படைப்புகளை பாவத்திலேயே வைத்திருப்பார் என்று எண்ணுவது சரிதானா?

30. இரட்சிப்புக்கு ஒரு மனிதனின் வெறும் மனந்திரும்புதல் மட்டும் ஏன் போதாது?

31. இயேசு கிறிஸ்துவின் மனிதவதாரத்திற்கு, இறைவனின் வெளிப்பாடுகளில் உள்ள சான்றுகள் எவை?

32. இயேசு கிறிஸ்துவின் மனிதவதாரத்திற்கு தீர்க்கதரிசன சான்றுகள் எவை?

33. இறைவனின் பார்வையில் மிகவும் விரும்பத்தக் பலி எது?

34. இயேசு தம்முடைய மீட்பின் இலக்ாக யூதர்களை மாத்திரம் வைத்திருந்தாரா அல்லது மனுக்குலம் அனைத்தையும் வைத்திருந்தாரா?

இந்த புத்தகத்திலிருக்கிறவற்றை நீங்கள் விளக்கிக் கொண்டீர்களா என்பதை அறிய கீழ்கண்ட வினாக்களுக்கு பதில் எழுதி அனுப்புங்கள். நீங்கள் எழுத வேண்டிய முகவரி



**எமது பிற வெளியீடுகள் :**

1. உறுதியை தேடி - கெ.கெ.அலவி
2. கிறிஸ்து இஸ்லாமில் - அப்துல் ஃபாதி
3. வேதாகமத்தின் தூய்மை (குர் ஆன், ஹதீஸின் அடிப்படையில்)
4. நான் ஏன் கிறிஸ்தவனானேன்? - மௌலவி சுல்தான் முஹம்மது பால்)
5. கலாநிதி மௌலவி இம்மத் உத்தின் லாஹீஸ் போதகரின் வாழ்க்கைச் சுருக்கம்
6. இயேசு கிறிஸ்துவின் மார்க்கம் ரத்து செய்யப்படவில்லை - இஸ்கந்தர் ஜதீத்
7. நற்செய்தியின் உண்மையினை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? - இஸ்கந்தர் ஜதீத்
8. இஸ்லாமிலும் கிறிஸ்துவத்திலும் பாவமும், நிவாரணமும் - இஸ்கந்தர் ஜதீத்
9. தேவன் நித்திய ஜீவனுக்காக என்னைத் தெரிந்து கொண்டார். - ஹம்ரன் அம்பரி
10. சிந்திப்போருக்கு சில முத்துக்கள் - நிக்கொலா யாக்கூப் காபிரில்
11. ஈஸா சிலுவையில் அறையப்பட்டாரா?
12. தவ்றாத்தையும் இன்ஜீலையும் உறுதிப்படுத்தும் குர் ஆனின் சாட்சி
13. திருத்தம்
14. தேவன் நமது பரலோகப் பிதா
15. சிலுவையின் பொருள்
16. கிறிஸ்துவைக் குறித்து உங்கள் எண்ணம் என்ன?
17. கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறைப்பட்டாரா?
18. திரித்துவமும் ஒருமைத்துவமும்
19. பிழையற்ற வேதாகமம்
20. இறைவன் மாம்சத்தில் தோன்றினாரா?